1972 மார்ச் 18]

வீட்டு வசதி வாரியம் அடைந்துள்ள கடன்கள்

*568 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயுள் இன்சூரன்ஸ் கழகம் 1969–70, 1970–71 ஆகிய ஆண்டுகளில் வீட்டு வசதி வாரியத்துக்கு வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

(இ) இதன் அளவை அதிகரிக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு 1969–70, 1970–71 ஆண்டுகளில் நேரிடையாகக் கடன் தொகை எதுவும் வழங்கவில்லை.

(இ & உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் வீட்டு வசதி வாரியத்திற்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடமிருந்து கடன் வழங்கவில்லை என்று கூறுகிறார்கள். அப்படி வழங்காமல் இருந்தாலும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் மூலம் கடன் பெற்று வீட்டு வசதியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கேள்வி நீங்கள் நேரடியாகப் பெறுகிறீர்களா என்பது. நேரடியாக அவர்கள் வழங்குவது இல்லை என்று சொன்னேன். ஆனால் மத்திய அரசு தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நேர்முகமாகப் பெற்றுக்கொள்ள 100 லட்சம் ரூபாய், அதாவது ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. நாம் 888 இலட்சம் ரூபாய்க்கு நிதி உதவி கோரியிருக்கிறோம். அதில்கூட 150 இலட்சம் ரூபாய் தருவதாக எல்.ஐ.சி. வாக்களித்திருக்கிறது.

அரசுப் பேருந்துகளில் புகைப் போக்கிகள்.

* 569 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துத் துறையில் உள்ள பேருந்துகளில் புகைப் போக்கிகளை மேல்நோக்கி வைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?